# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>O.S.No.35/2019</u>

PW1 ஜெகநாதன் நாள் 17.03.2023

<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு தொடர் குறுக்கு விசாரணை</u>

எனக்கு திருமணம் ஆனது 1965 ஆகும். எனக்கு ஒரு பையன், 4 மகள்கள் உள்ளனர். எனது பையன் பெயர் முருகேசன். எனது மகள்கள் பெயர்கள், உஷா, பிரேமா, வெள்ளையம்மாள், அழகி ஆகும். எனது தம்பி தங்கையாவுக்கும் அடிக்கடி தகராறு வருமா என்றால் முன்பு வரும் இப்போது வரவில்லை. என் தம்பி அடிக்கடி சண்டை போட்டுவிட்டு வெளியே போய்விடுவார் என்றால் சரிதான். என் தம்பிக்கு திருமணம் ஆன வருடம் எனக்கு ஞாபகமில்லை. என் தம்பி பொருட்களை தவணை முறையில் விற்பனை செய்து வசூல் செய்வார் என்றால் சரிதான். என் தம்பி 1983 ல் தேசிய நெடுஞ்சாலை துறையில் அலுவலக உதவியாளராக வேலை பார்த்தார் என்றால் என் தம்பி ஏதோ வேலையில் சேர்ந்தார் என்ன வேலை என்று எனக்கு தெரியாது. 1980 ல் என் அப்பாவுடன் ஏற்பட்ட தகராறில் என் தம்பி தனியாக சென்றுவிட்டாரா என்றால் ஆமாம். அப்போதிலிருந்து அவர் அவருடைய குடும்பத்துடன் தனியாக தான் வசிக்கிறார். பாகப்பத்திரம் எழுதும் போது அவரை கூப்பிட்டு வந்து எழுதினோம் என்றால் சரிதான். நான் வழக்கிற்கு அவசியமான தரப்பினரை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்மென்றால் சரியல்ல.

**20-ம் பிரதிவாதி 1 முதல் 4 பிரதிவாதிகளின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.**

<u>மறுவிசாரணை</u>

இல்லை.